DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the Court of the Judicial Magistrate No.II, Mayiladuthurai

**CC. No. 99/2024**

**Cross examination of PW2** Dt. 23.02.2026

| | |
|---|---|
| Name | பைசல்ரகுமான் |
| Father's/Husband's Name | முகமதுஇப்ராகிம் |
| Village | நீடூர் |
| Taluk | மயிலாடுதுறை |
| Age | 54/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day 23.02.2026

(Accused present)

எதிரி தரப்பில் மேற்படி சாட்சியை குறுக்கு விசாரணை செய்வதற்காக மீண்டும் அழைத்து விசாரிக்க **Crl.MP. No. /2026** மனுதாக்கல் செய்யப்பட்டு செலவு தொகை ரூ. 500/– செலுத்தியதின் பேரில் மேற்படி மனு அனுமதிக்கப்பட்டு சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

அ.சா.1 எனது உறவினர் என்றால் சரிதான். புகார்தாரர் எனது உறவினர் என்றால் சரிதான். எனக்கு தொழில் சிமெண்ட் வியாபாரம் என்றால் சரிதான். என் மேல் சிமெண்ட் வியாபாரம் தொடர்பாக நான் கொடுத்த காசோலை திருப்பப்பட்டு என் மீது காசோலை மோசடி வழக்கு உள்ளதா என்றால் சமரசம் செய்து என்னால் முடிக்கப்பட்டது எத்தனை ஆண்டுகள் வழக்கு நடந்தது என்றால் 10 ஆண்டுகளுக்கு மேல் இருக்கும். அதனால் கோர்ட்டின் நடவடிக்கைகள் பற்றி எனக்கு அனுபவம் உண்டு என்றால் சரியல்ல. முதல் விசாரணையில் 2017 ல் புகார்தாரரிடம் எதிரி பவர் பத்திரம் எழுதி கேட்டு புகார்தாரர் எழுதி கொடுக்க மறுத்ததால் எதிரி போலியாக பவர் பத்திரம் தயார் செய்ததாக தெரிவித்துள்ளேன் என்றால் சரிதான். 2 பவர் பத்திரங்களையும் நான் நேரடியாக பார்த்தது இல்லை என்றால் சரிதான். 2 பவர் பத்திரங்களும் எந்த தேதி, மாதம், வருடம், எங்கு வைத்து யாரால் தயார் செய்யப்பட்டது என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். போலீசார் என்னை இந்த வழக்கு சம்பந்தமாக எங்கு வைத்து விசாரித்தார்கள் என்றால் தேதி நினைவில் இல்லை. நாகப்பட்டினம் காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் வைத்து விசாரித்தார்கள். 2019 ம் ஆண்டு விசாரணை செய்ததாக நினைக்கிறேன். புகார்தாரர், அசா.1 மற்றும் என்னை ஒரே தேதியில் விசாரணை செய்தார்கள் என்றால் சரிதான். போலீசார் புகார்தாரரை விசாரணை செய்த போது ஆவணங்கள் எதுவும், அவர் போலீசாரிடம் கொடுத்தாரா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 2009, 2019 ம் ஆண்டு பவர் பத்திரங்களை பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். முகமதுஅலி மயிலாடுதுறை சார்பு நீதிமன்றத்தில் OS No. 385/2019 வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. அந்த வழக்கில் எந்த முடிவு ஏற்பட்டது என்று எனக்கு தெரியாது. 2019 ம் ஆண்டு முகமதுஅலி எதிரிக்கு எழுதி கொடுத்த பவர் பத்திரம் மயிலாடுதுறை சார்பதிவாளர் அலுவலகத்தில் Adjudicate செய்யப்பட்ட நிலையில் அதனை ரத்து செய்ய புகார்தாரர் தரப்பில் மயிலாடுதுறை சார்பதிவாளர் அலுவலகத்தில் மனு கொடுக்கப்பட்ட விபரம் தெரியுமா என்றால் தெரியாது. முகமது அலி என்னிடம் தெரிவித்த விபரங்களை தான் நான் போலீசார் விசாரணையில் தெரிவித்தேன் என்றால் சரிதான்.

என்னால் எழுதிக்கொள்ளப்பட்டு. எதிரியின் முன்னிலையில் சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு [illegible] ஏற்கப்பட்டது.

23/2/26

நீதித்துறை நடுவர் எண்-II

மயிலாடுதுறை